DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 138/2015

Prosecution Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : சப்னாஆஸ்மின் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.ஆசாத் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2023.

(Accused absent. Petition u/s.317 Cr.P.C., filed and allowed)

முதல் விசாரணை :

1. நான் தற்போது கோவையில் குடியிருக்கிறேன். 07.10.2012 அன்று எனக்கும் 1 வது எதிரிக்கும் கோவை ஆயிஷா மஹாலில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னிட்டு என்னுடைய கணவர் வீட்டில் கூட்டு குடும்பமாக இருந்து வந்தோம். திருமணத்திற்காக 156 பவுன் தங்க நகை எனக்கு சீதனமாக என் பெற்றோர் கொடுத்தார்கள்.

2. Volks Wagon Vento car என் பெற்றோர்கள் சீதனமாக வாங்கி கொடுத்தார்கள். அந்த காரின் நிறம் என் கணவருக்கு பிடிக்கவில்லை என்று கூறிவிட்டார். அதனால் என்னுடைய தகப்பனார் அதே காரில் என் கணவருக்கு பிடித்த நிறத்தில் வாங்கி கொடுத்தார்.

3. திருமணத்திறகு பின்னிட்டு கூட்டு குடும்பமாக நான், என்னுடைய கணவர் மற்றும் அவரது தாய், தந்தை, அக்கா. அக்காவின் கணவர் மற்றும் அவரது மகள் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்தோம். என் கணவர், அவரது பெற்றோர் மற்றும் அக்கா, அக்காவின் கணவர் ஆகியோர் திருமணத்திற்காக நான் அணிவித்திருந்த 156 பவுன் நகை போதவில்லை என்றும், மேலும் நகைகளை வாங்கி வரும்படி என்னிடம் பிரச்சனை செய்தார்கள்.

4. திருமணமான அதே மாதத்தில் என்னை பொள்ளாச்சி டவுனில் உள்ள

பழைய பவிழம் ஜுவல்லர்ஸ் என்ற கடைக்கு அழைத்துச்சென்று நகைகளை எதிரிகள் எடைபோட்டு பார்க்கச்சொன்னார்கள். நான் வரமாட்டேன் என்று கூறியதற்கு என்னை வலுக்கட்டாயமாக அழைத்துச்சென்றார்கள்.

5. நான் திருமண சமயத்தில் M.Sc.( Information Technology) கோவை, கிருஷ்ணா கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். என்னை அவர்கள் தேர்வு எழுதுவதற்காக அனுமதிக்கவில்லை.

6. பணத்திற்காகதான் உன்னை கல்யாணம் பண்ணினேன் என்று எதிரிகள் என்னிடம் கூறி மிரட்டி ஒரு வெற்று பத்திரத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னுடைய கைபேசியை எதிரிகள் வாங்கி வைத்துக்கொண்டு என்னுடைய தாய், தகப்பனாரிடம் பேசக்கூடாது என்று கண்டித்தார்கள்.

7. வீட்டிலேயே என்னை அடைத்து வைத்திருந்தார்கள். 1வது எதிரி பெங்களுரில் வேலை பார்த்து வந்தார். வாரத்தில் ஒருநாள்தான் வீட்டிற்கு வருவார். 5 வது எதிரி நான் வீட்டில் இருந்தபோது இரவு நேரத்தில் படுக்கை அறையின் கதவை பூட்டாமல்தான் தூங்கவேண்டும் என்று கூறினார்.

8. திருமணத்திற்கு பின்னிட்டு 4, 5 மாதங்கள் கழித்து என்னுடைய அப்பா, வீட்டிற்கு வந்து என்னை அழைத்துச்செல்வதாக கூறி கோவையில் உள்ள என்னுடைய வீட்டிற்கு சென்றார்கள். நான் அந்த சமயத்தில் கருவுற்றிருந்தேன். இது பற்றி என் கணவரிடம் தெரிவித்தேன். ஆனால் அவர் எந்த பதிலும் அளிக்கவில்லை. 10 மாதமாக என்னுடைய பெற்றோர் வீட்டில்தான் நான் இருந்து வந்தேன். ஆனால் 1ம் எதிரி 3 மாதத்திற்கு ஒருமுறை தலாக் நோட்டிஸ் அனுப்பிவைத்தார். நான் அதை கையொப்பம் செய்து பெற்றுக்கொண்டேன்.

9. நவம்பவர் 01ம் தேதி 2013 அன்று KG மருத்துவமனையில் வைத்து எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த செலவுகளை எல்லாம் என் பெற்றோர்தான் செய்தனர். குழந்தை பிறந்த விபரத்தை 1ம் எதிரிக்கு தெரிவித்தும் அவர் குழந்தை எனக்கு பிறக்கவில்லை என்றும், குழந்தை யாருக்கு பிறந்தது என்று எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டார்.

10. 40 நாட்கள் என்னுடைய பெற்றோர்கள் வீட்டில்தான இருந்தேன். பின்னர் கோவையில் அல் அமீன் காலனியில் உள்ள பள்ளிவாசலில் வைத்து 1வது எதிரியும் அவரதுசதகப்பனார் 2 வது எதிரியும் பள்ளி வாசலுக்கு வந்திருந்தார்கள். சமாதானம்

பேசி என் பெற்றோரிடம் சமாதானம் கூறி குழந்தையையும் என்னையும் 40 நாட்கள் கழித்து எதிரிகள் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

11. அங்கு நான் இருந்தபோது என்னை 2 முதல் 5 எதிரிகளும் கொடுமைப்படுத்தினார்கள். வீட்டிற்குள் என்னை அடைத்து வைத்தார்கள். என்னுடைய குழந்தையின் மீது 3வது எதிரி சூடான குழம்பை எடுத்து ஊற்றிவிட்டார்கள். என்னுடைய குழந்தையின் உடல் சிவந்துவிட்டது. என்னுடைய குழந்தை அழுதுகொண்டிருந்தது. குழந்தையை 1வது எதிரியின் அக்கா தூக்கி தூக்கி வீசினார்.

12. ஜெயபால் என்ற எங்கள் இரு குடும்பத்திற்கும் தெரிந்த நபர் பொள்ளாச்சியில் வசித்து வந்தார். அவரிடம் போன் மூலமாக 1வது எதிரியின் தகப்பனாரிடம் என்னை பார்ப்பதற்காக அனுமதி பெற்றுதருமாறு என் பெற்றோர் கூறினார்கள். அப்போது என்னுடைய மாமனார் ஜெயபால் என்பவரிடம் அப்படி ஒரு நபர் உயிரோடு இல்லை இறந்துவிட்டார் என்று கூறினார்.

13. அதைக் கேட்டு என்னுடைய பெற்றோர் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு வந்து மகளிர் போலீஸை அழைத்துக்கொண்டு 1வது எதிரியின் வீட்டிற்கு வந்து கதவை தட்டியபோது அவர்கள் திறக்கவில்லை. கதவை உடைத்துவிடுவோம் என்றும், கதவை திறக்குமாறு கூறியபின்பு ரொம்ப நேரம் கழித்து கதவை திறந்தார்கள்.

14. மகளிர் போலீஸ் என்னுடைய மாமனர், மாமியார். எனது கணவர், அவரது அக்கா, அக்காவின் கணவர் ஆகியோரிடம் பேசினார்கள். ஆனால் மகளிர் போலீஸ் நிலைமை மோசமாக இருந்த காரணத்தினால் என்னை என்னுடைய பெற்றோருடன் வீட்டிற்கு அழைத்துச்செல்லுமாறு கூறினார்கள்.

15. நானும் என்னுடைய குழந்தையும் என் பேற்றோருடன் என்னுடைய வீட்டிற்கு வந்துவிட்டோம். நான் போட்டிருந்த எல்லா நகைகள் மற்றும் பட்டு புடவை, துணி மணிகள், செல்போன், நான் படித்த பள்ளி சான்றிதழ், கார் ஆகியவற்றை எதிரிகள் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டேன்.

16. பள்ளி வாசல் மூலமாக பேசி என் தகப்பனார் சீதனமாக கொடுத்த காரை 1வது எதிரி திருப்பி கொடுத்துவிட்டார். ஆனால் நகையை திருப்பித்தரவில்லை. இது சம்மந்தமாக நான் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

17. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் **அசாஆ 1** ஆகும். அதன் பின்னிட்டு பேஸ் புக்கில் என்னுடைய புகைப்படத்தை வைத்து நிறைய நபர்களுடன் எனக்கு தொடர்பு இருப்பதாக 1வது எதிரி பதிவிறக்கம் செய்திருந்தார்.

18. தற்போது நானும் என்னுடைய குழந்தையும் என்னுடைய தகப்பனார் வீட்டில்தான் இருந்து வருகிறோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. எனக்கும் 1ம் எதிரிக்கும் பெற்றோர்கள் நிச்சயித்ததின்பேரில்தான் திருமணம் நடந்தது. 1ம் எதிரியுடன் நான் விவாகரத்து பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் 2வது திருமணம் செய்துவிட்டேன் என்றால் சரிதான். 2வது திருமணத்தில் எனக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது என்றால் சரிதான்.

2. பொதுவாக ஒரு கணவர் மனைவிக்கு தலாக் கொடுக்கும்போது ஜமாத்தில் வைத்து பைசல் பேசுவார்கள் என்றால் சரிதான். ஆனால் என் விஷயத்தில் அது ஒத்துப்போகவில்லை. என் கணவர் பைசலாக செல்லவில்லை. அவ்வாறு நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், என் கணவர் பைசல் செய்ய விருப்பப்பட்டார் என்றாலும், நான் தான் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

3. பொதுவாக பைசல் ஜமாத்தில் நடைபெற்றால் பெண்ணிற்கு கொடுக்கப்பட் சீதனம் மற்றும் நகைகளை பெண் வீட்டாருக்கு திருப்பி கொடுக்கும்படி கூறுவார்கள் என்றால் சரிதான். என் விஷயத்தில் அவ்வாறு நடைபெறவில்லை.

4. என் கணவர் எனக்கு சீதனம் மற்றும் நகைகளை திருப்பி தரவில்லை என்று ஜமாத்தில் பதிவேட்டில் உள்ளது. அதற்கான ஆவணத்தை நான் போலீசரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. கோவை குடும்ப நல நீதிமன்றத்தில் என் கணவர் மீது விவாக ரத்து வழக்கு நான்தான் தாக்கல் செய்தேன் என்றால் நினைவில்லை. அவ்வாறு நான்தான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அங்கு எனக்கு

சேரவேண்டிய பொருட்களை பெற்றுக்கொண்டபிறகுதான் நான் என் கணவருக்கு விவாகரத்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

6. 1வது எதிரி மீது கோவை B 1 காவல் நிலையம் மற்றும் சைபர் கிரைம் போலீசாரிடமும் என் கணவர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு துடியலூர் காவல் நிலையத்தில் 1வது எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

7. இவ்வழக்கு குறித்து எனது முதல் புகாரை போத்தனூர் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் பல வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு நினைவில்லை. பொள்ளாச்சி மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. எனது செல்வாக்கை பயன்படுத்தி கோவை மாவட்டத்திலேயே எதிரிகள் மீது 5 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. 5 வழக்குகளும் இது தொடர்புடையது என்றால் சரியல்ல. கோவை, ஜே.எம் 7 நீதிமன்றத்தில் DVA 56/2014 என்ற வழக்கை 1ம்எ திரி மீது நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9. மேற்படி வழக்கில் நான் புசா 1 ஆக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது நகைகள் மற்றும் காரை திரும்ப பெற்றுக்கொண்டசாட்சியமளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

(எதிரிகள் வழக்கறிஞர் மேலும் சில ஆவணங்களை வைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றும், எனவே வழக்கு விசாரணையை வேறு தேதிக்கு ஒத்தி வைக்குமாறும் கேட்டக்கொண்டதை பரிசீலித்து அசா 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedhranyan)
Judicial Magistrate No.I,
Pollachi.